மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு 15 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒருவருக்கு ஒரு துணைக் கேள்விதான் என்ற அடிப்படையிலே எல்லோரும் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு). நீங்கள் இன்னொரு கேள்வி கேட்க வேண்டும் என்றிருந்தால், முன்கூட்டியே சொல்லியிருக்க வேண்டும்.

(ஐ) வேளச்சேரி ஏரி நீர்பிடிப்பு மட்டத்தை குறைத்து வெள்ளப் பாதிப்பைத் தவிர்த்தல்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வேளச்சேரி ஏரியில் நீர் பிடிப்பு மட்டத்தை குறைப்பதற்கான பணிகள் விரைவில் துவக்கப் படாததால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

வேளச்சேரி ஏரியின் எதிர்வாயிலில் உள்ள குடியிருப்புகளின் வெள்ளப் பாதிப்புகளை களைய வேளச்சேரி ஏரியின் முழு நீர் மட்டத்தை 4' குறைக்க தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் அனுப்பிய ரூ. 4.80 லட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு அரசு ஆணை எண். 712, பொதுப்பணித்துறை, நாள் 21—3—1986-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்வேலைக்கான ஒப்பந்தங்கள் நிச்சயிக்கப்பட்டு வளைவு கரைபணிகள் முடிந்து மற்ற வேலைகள் துவக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு மழைக் காலத்திற்குள் வேலைகள் முடிவு பெறும். வேளச்சேரி குடியிருப்போர் நல சங்கத்தின் கோரிக்கையின்படி, கலிங்கலினின்று உபரி நீர்க் கால்வாய் அமைத்து, அருகில் உள்ள சதுப்பு நிலத்தில் சேர்த்து விட திட்டம் பொதுப்பணித்துறை அதிகாரிகளால் தீட்டப்பட்டு வருகிறது.

*திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 21—3—1986 அன்று உத்தரவு வழங்கப்பட்டும், இன்னும் அந்தப்

1987 ஏப்ரல் 22] [திரு. சைதை சா. துரைசாமி]

பணி முழுமை பெறவில்லை என்பது மாத்திரமல்ல, துவங்கப் பட்ட நிலையிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, வருகின்ற காலம் மழைக்காலமாக இருக்கிற காரணத்தால், விரைந்து அந்தப் பணியை முடித்து வைக்கவும், அதேநேரத்திலே அந்தக் கலுங்கலிலிருந்து உபரி நீர்க் கால்வாய் அமைப்பதாக சொல்லப் பட்டுள்ளது, அதற்கு எவ்வளவு நிதி மதிப்பீடு செய்யப்பட்டிருக் கிறது, அந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்பதையும் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டப் பணியை வேகமாக ஆரம்பித்து, முடிக்க வேண்டும் என்ற உணர்வை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். புதிதாக கலுங்கல் கட்டுவதற்கு முன்பாக தண்ணீர் உள்ள அந்தப் பகுதியிலே கரையை வெட்டவேண்டியதாக இருப்பதால் வளைவாக அந்த மண் அணைப்பை இப்போது அமைத்திருக் கிறார்கள். வேகமாக வேலையைச் செய்ய வேண்டும் என்ற உணர்வை அந்த அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். கால்வாய் வெட்ட வேண்டுமென்று சொன்னாலும், அதற்கு நிரம்பப் பணம் ஆகும் என்பதால், நிதிநிலைமை சீரான பிறகு அந்த வேலையை எடுக்கலாம் என்று வைத்து இருக்கிறோம்.

(ஒ) இராமாநதி நீர்த்தேக்கத்தின் ஆயக்கட்டுகளை விஸ்தரித்தல்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "இராமாநதி அணையில் வீணாகப் போகும் தண்ணீரை சேர்வைக்காரன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கேளையாப்பிள்ளையூர் குளத்திலிருந்து அணைந்த பெருமாள் நாடானூர் ஊராட்சியிலுள்ள அனைத்து மானாவாரிக் குளங்களுக்கும் கால்வாய் வெட்டிக் கொண்டு வந்தால் சுமார் 250 எக்கர் நிலம் நிரந்தர பாசன வசதி பெற ஏதுவாவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்: